28.04.2026.

D.V.C.06/2024

ம.சா.2. ரமேஷ். த/பெ.முனியப்பன்

எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12-ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். எழுத படிக்க தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில முதலில டேனியல்குமாரா பார்த்தியநாதன என்பவர் பெயரில் இருந்ததை அடித்துவிட்டு முனியப்பன் குமாரர் ரமேஷ் என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர் அழைத்தன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது தரப்பில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான்தான் ரமேஷ் என்பதற்கு எனது தரப்பில் ஆதார் அடையா அட்டை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை தற்போது என்னிடம் ஆதார அடையாள அட்டை என்னிடம் உள்ளது. (ஆதார அடையாள அட்டை சரிபார்க்கப்பட்டது) நானும் மனுதாரரும் ஒரே கிராமம் மற்றும் தெருவில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான்.

மனுதாரர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் உறவுமுறை இல்லை. ஒரே தெருவை சார்ந்தவா் ஆவார். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் எப்போது எங்கு திருமணம் நடைபெற்றது தெரியுமா என்றால் 28.10.2022ம் தேதி திருப்பதி கோவிலில் திருமணம் நடைபெற்றது. அந்த திருமணத்தில் நான் கலந்துகொண்டேனா என்றால் கலந்துகொண்டேன். 1ம் மனுதாரரின் கணவர் உடல்நிலை குறைவால் இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் ஆனால் எந்த தேதியில் எங்கு எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது கேள்விபட்டேன்.

மேலும் எனது நிரூபண வாக்குமூலத்தில் 1ம் மனுதாரருக்கு சீதனமாக அளித்த சுமார் 60 சவரன் தங்க நகைகளை 1ம் மனுதாரர் அடகு வைத்தும், விற்பனை செய்தும் மேலும் பெற்றோரிடமிருந்து பணமாக பெற்றும் தன் கணவருக்கு டூரிஸ்டு பஸ், கல்லூரி வேன், கார், புல்லட இருச்சகர வாகனம மற்றும ரூ.40000/-ம் செல்பேன வாங்கித்தந்ததாக குறிப்பிட்டுள்ளேன் அதைபற்றி நேரடியாக 1ம் மனுதாரர் நகைகளை எங்கு அடகுவைத்தார், விற்பணை செய்தார் மற்றும் பெற்றோரிடமிருந்து எவ்வளவு பணம் பெற்றார் என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 1ம் மனுதாரரின் கணவருக்கு வாங்கி கொடுத்ததாக சொல்லப்படும் டூரிஸ்டு பஸ், கல்லூரி வேன், கார் ஆகியவை திருமணத்திற்கு முன்பே வாங்கப்பட்டது என்றால் அதைபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மேலும் ரூ.40000/-ம் மதிப்புள்ள செல்போன் 2ம் எதிர்மனுதாரர் அகத்தியன் தனக்காக ஆற்காடு ரிலயன்ஸ் கம்பெனியில் தவணைமுறையில் வாங்கினார் என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மேலும் எனது நிரூபண வாக்குமூலத்தில் டூரிஸ்டு பஸ், கல்லூரி வேன், கார்மூலம் வந்த வருமானத்தை 1ம் மனுதாரரின் கணவர் ராஜ்கமல் என்பவரது வங்கி கணக்கில் வைப்பீடு செய்துவந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன், அவ்வாறு எந்த கிளை வங்கியில் கணக்கு வைத்திருந்தார் என்பது பற்றி தெரியுமா என்றால் அதைபற்றி எனக்கு எதுவும் தெரியாது, நான் திருமணததிற்கு மட்டும்தான் சென்றேன் மற்றபடி அவர்களுக்குள் நடந்த மற்ற விஷயங்களை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது.

திருமணத்திற்கு பிறகு 1ம் மனுதாரரும் அவரது கணவரும் எங்கு எப்படி கூட்டு குடும்பமாகவோ தனிகுடித்தனமாகவோ வசித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் மனுதாரருக்குதிருமணத்திற்க என்ன சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள் அதைஎங்கு வைத்து பராமரித்தார்கள் என்பது பற்றி தெரியுமா என்றால் சீர்வரிசை பொருட்கள் வந்தவாசி மக்கள் ஸ்டோரில் வாங்கப்பட்டு வந்தவாசி ஆரணி ரோட்டில் உள்ள ஸ்ரீனிவாசா திருமண மண்டபத்தில் வரவேற்புரை நடந்தது, ஆனால் சீர்வரிசை பொருட்கள் மாப்பிள்ளை வீட்டிற்குதான் எடுத்துச்சென்றிருப்பார்கள்.

1ம் மனுதாரர் அவரது கணவர் இறந்தபோது மனைவி என்ற முறையில் எந்தவித ஒரு சடங்கையும் செய்யாமல் 5 நிமிடம் மட்டும் இருந்துவிட்டு சென்றுவிட்டார் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு எதுவும் தெரியாது. இந்நிலையில் எதன் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரரின் கணவரின் இறப்பிற்கு அவரை அழைக்கவில்லை என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் டூரிஸ்டு பஸ், கல்லூரி வேன், கார், புல்லட் இருசக்கர வாகனம் ஆகியவற்றை பெயர் மாற்றம் செய்து 1 முதல 3 எதிர்மனுதாரர்கள் எடுத்துச்செல்ல முயற்சி செய்து மோசடி செய்ததாக குறிப்பிட்டுள்ளது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் 1ம் மனுதாரர் சொல்லிதான் தெரியும் நேரடியாக தெரியாது.

மேலும் எனது நிரூபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர்கள் 1ம் மனுதாரரும் அவரது கணவரும் வசித்துவந்த வீட்டின் பூட்டை உடைத்து அனைத்து பொருட்களையும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் எடுத்துச்சென்றுவிட்டதாக குறிப்பிட்டுள்ளது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது 1ம் மனுதாரர் சொல்லிதான் தெரியும். மேலும் எனது நிரூபண வாக்குமூலத்தில் 1ம் மனுதாரரை கழுத்தை பிடித்து வீட்டைவிட்டு வெளியே தள்ளியதாக குறிப்பிட்டுள்ளதுபற்றி நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது 1ம் மனுதாரர் சொல்லி தெரியும். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி விஷயங்கள் பற்றி நன்கு தெரியும் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல 1ம் மனுதாரர் சொல்லிதான் அந்த விஷயங்கள் தெரியும்.

1ம் மனுதாரரின் கணவர் ராஜ்கமலுக்கு எதிராக சோளிங்கர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சாந்தி என்பவர் தாக்கல் செய்த ரூ.5/- லட்சத்திற்கான காசோலை மோசடி வழக்கில் குற்றவாளி என்று தீர்ப்பு பகரப்பட்டுள்ளது, அதன் பேரில் மேல்முறையீடு எண்.105/ 2019 ராணிபேட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் உஷா க/பெ.கஜேந்திரன் என்பவர் சோளிங்கர் நகர காவல் நிலையத்தில் ரூ. 3 1/2/- லட்சம் மோசடி சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளார். மேற்படி ராஜ்கமலுக்கு எந்தவித வருமானமும் இல்லை மாறாக கடன்தான் இருந்தது அவரது வங்கி கணக்கில் எந்தவித இருப்பும் இருக்க வாய்ப்பில்லை அதனால் எதிர்மனுதாரர்கள் 1ம் மனுதாரரை மோசடி செய்தார்கள் என்ற கூற்று உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல.

1ம் மனுதாரரே தனது சாட்சியத்தில் டூரிஸ்ட் பஸ், கார், கல்லூரி வேன் ஆகியவற்றை நாங்களே பராமரித்து வந்தோம் என்று சொல்லியிருக்ககும் பட்சத்தில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களிடமிருந்து அந்த பொருட்களை பெற்றுதருமாறு எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. 1ம் மனுதாரருக்கும் அவரது கணவருக்கும் இடையே நடந்த குடும்ப விஷயங்கள் பற்றி நேரடியாக தெரியாத பட்சத்தில் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.